**O.S.105/2021**

Date : 17.10.2024

வா.சா.2 : கொம்பையா

<u>வா.சா. 2 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். வழக்கு என்ன விவரத்திற்காக போடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்து வைத்திருந்தார்கள் நான் அதில் கையொப்பம் போட்டேன். எந்த வருடம் பிரதிவாதி குடியிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் கொரொனாவிற்கு முன்பு வரை பாதுஷா என்பவர் குடியிருந்தார். அதன்பின்பு அவரது ஊருக்கு போய்விட்டார். அவரை எனக்க 15 வருடங்களாக தெரியும். அவர் ஆட்டோ ஓட்டுகிறார். நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.